**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குமாரபாளையம்**
**அ.வ.எண்.259/2020**

2026ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12ம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா.2 ன் வாக்குமூலம் விசாரிக்கப்பட்டு 1969ம் ஆண்டின் 10வது சட்ட விதிகளின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டுப் பிரமாணம் செய்யப்பட்டது.

எனது சாட்சியப் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டதுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ராகுல்பிரசாத் | தொழில்: | |
| த/பெ: | தங்கவேல் | சமயம்: | இந்து |
| முகவரி: | கோயம்புத்தூர் | வயது: | |
| தாலுக்கா: | கோயம்புத்தூர் | மாவட்டம்: | கோயம்புத்தூர் |

12.08.2026

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் 3ம் பிரதிவாதி ஆவேன். நான் எனது முதல் விசாரணைக்காக நிரூபணப் பிரமாணப் பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன். அதனைப் படித்துப் பார்த்துக் கையொப்பம் செய்தேன். அதில் உள்ள சங்கதிகளை நான் சொல்லி தான் எனது வழக்கறிஞர் தயார் செய்தார். நான் வா.சா.ஆ.10 மூலம் தாவா சொத்தினை கிரையம் பெற்றேன். இவ்வழக்கில் நான் இன்று தாக்கல் செய்துள்ள கீழ்க்கண்ட ஆவணங்களைக் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 24.02.2016 | ரூ.50000/-ற்கு 1ம் பிரதிவாதி, 1ம் வாதிக்கு ஆதரவாக எழுதிக்கொடுத்த கடனுறுதிச் சீட்டு | சான்றிட்ட நகல் | பி.வா.சா.ஆ.5 |
| 2 | 01.10.2015 | ரூ.11,00,000/-ற்கு 1ம் பிரதிவாதி, 2ம் வாதிக்கு ஆதரவாக எழுதிக்கொடுத்த கடனுறுதிச் சீட்டு | சான்றிட்ட நகல் | பி.வா.சா.ஆ.6 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | 14.06.2016 | ஈரோடு முதன்மை கூடுதல் மாவட்ட நீதிமன்றம் அ.வ.எண்.40/2016ல் கொடுத்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை | சான்றிட்ட நகல் | பி.வா.சா.ஆ.7 |
| 4 | 06.05.2013 | 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக எழுதிக்கொடுக்கப்பட்ட கிரைய ஆவணம் | சான்றிட்ட நகல் | பி.வா.சா.ஆ.8 |
| 5 | 12.01.2016 | 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு ஆதரவாக எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் | சான்றிட்ட நகல் | பி.வா.சா.ஆ.9 |
| 6 | 24.06.2025 | குமாரபாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் கொடுக்கப்பட்ட பற்றுகை நீக்கறவு உத்தரவு | அசல் | பி.வா.சா.ஆ.10 |
| 7 | 26.08.2022 | தினமலர் நாளிதழில் கொடுக்கப்பட்ட விளம்பர அறிவிப்பு | அசல் | பி.வா.சா.ஆ.11 |

**(3ம் பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க ஆவணங்கள் குறியீடு செய்யவேண்டி ஒத்திவைக்கப்படுகிறது)**